குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 90–2023

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. வெங்கடேசப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பசப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 60 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.03.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் குடிசாகனப்பள்ளியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னை மட்டன் வெங்கடேஷ் என்றும் அழைப்பார்கள். கோட்டசாதனப்பள்ளியை சேர்ந்த பட்டியல் சாட்சி.1 பாலாஜி என்பவரை எனக்கு தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் போலிசாரிடம் வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னேன்.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு**

**எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 12.05.2019ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு என்னுடைய வீட்டின் பின்புறம் நானும் சாட்சி பாலாஜியும் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக பாலாஜியை தடுத்து நிறுத்தி கம்பியால் தலையில் தாக்கி காயப்படுத்தி பணம் கேட்டு மிரட்டி அதே கம்பியால் பாலாஜியின் வலது கை மற்றும் வலது தொடையில் தாக்கி கொடுங்காயங்கள் ஏற்படுத்தினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு வெளியூரை சேர்ந்த புகார்தாரர் பாலாஜி இறந்துவிட்டதாலும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்த எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதாலும் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 90–2023

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. முனியப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.வெங்கடேசப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 48 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.03.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் குடிசாகனப்பள்ளியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கோட்டசாதனப்பள்ளியை சேர்ந்த பட்டியல் சாட்சி.1 பாலாஜி என்பவரை எனக்கு தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 6 ஆண்டுக்களுக்கு முன்பு ஒருநாள் சுமார் இரவு 8 மணிக்கு எங்கள் கிராமத்திற்குள் இருந்த போது பாலாஜி எனக்கு போன் செய்து தான் அதிகமாக குடித்துவிட்டதாகவும் போதை அதிகமாகி விட்டதென்றும் அதனால் தன்னை அழைத்து சென்று வீட்டில் விடும் படி சொன்னார். நான் ஊரில் ஓரமாக உள்ள தைலம்தோப்பில் சென்று பார்த்தபோது பாலாஜிக்கு காயம் ஏற்பட்டு இருந்தது. அவரை நான் என்னுடைய பைக்கில் பேரிகை அசோக மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக**

**சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 12.05.2019ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு அ.சா.1 யின் வீட்டின் பின்புறம் அ.சா.1ம் சாட்சி பாலாஜியும் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக பாலாஜியை தடுத்து நிறுத்தி கம்பியால் தலையில் தாக்கி காயப்படுத்தி பணம் கேட்டு மிரட்டி அதே கம்பியால் பாலாஜியின் வலது கை மற்றும் வலது தொடையில் தாக்கி கொடுங்காயங்கள் ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டதாகவும் தகவல் அறிந்து சம்பவ இடம் சென்று பாலாஜியை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு வெளியூரை சேர்ந்த புகார்தாரர் பாலாஜி இறந்துவிட்டதாலும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்த எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதாலும் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 90–2023

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. தேவராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கோத்தி ராமப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 46 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.03.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

<u>முதல் விசாரணை :</u>

நான் குடிசாகனப்பள்ளியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கோட்டசாதனப்பள்ளியை சேர்ந்த பட்டியல் சாட்சி.1 பாலாஜி என்பவரை எனக்கு தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு**

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 12.05.2019ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு அ.சா.1 யின் வீட்டின் பின்புறம் அ.சா.1ம் சாட்சி பாலாஜியும் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக பாலாஜியை தடுத்து நிறுத்தி கம்பியால் தலையில் தாக்கி காயப்படுத்தி பணம் கேட்டு மிரட்டி அதே கம்பியால் பாலாஜியின் வலது கை மற்றும் வலது தொடையில் தாக்கி கொடுங்காயங்கள் ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டதாகவும் தகவல் அறிந்து சம்பவ இடம் சென்று பாலாஜியை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தாக நான் கேள்விப்பட்டேன் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு வெளியூரை சேர்ந்த புகார்தாரர் பாலாஜி இறந்துவிட்டதாலும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்த எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதாலும் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**